ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/49 - 2016 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2016.01.01

*1947/49 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)*

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 235) 103ஆ (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், மாற்றியமைக்கப்படாதவை தொடர்பிலான சான்றிதழ் ஒன்றினை விநியோகிப்பதற்கான ஒழுங்கு விதிகளை அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, சனவரி 01.*

**ஒழுங்கு விதிகள்**

இந்த ஒழுங்கு விதிகள் ‘‘மாற்றியமைக்கப்படாதவை தொடர்பிலான ஒழுங்கு விதிகள்’’ என எடுத்துக்காட்டப்படலாம் என்பதோடு இந்த ஒழுங்கு விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1. ஒவ்வொரு கப்பல் தலைவன் அல்லது அத்தகைய கப்பல் தலைவனின் சம்மதத்தை வெளிப்படுத்துகின்றதொரு கப்பல் முகவர், இதனகத்துப் பின்னர் ‘‘சுமப்பவர்’’ என அழைக்கப்படுபவரின் வேண்டுகோளின் பேரில், ஒரு ‘‘மாற்றியமைக்கப்படாத சரக்கு’’ தொடர்பிலான ‘‘மாற்றியமைக்கப்படாதவை தொடர்பிலான சான்றிதழ்’’ ஒன்றினை விநியோகிப்பதற்கு இத்தால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது.

2. ‘‘மாற்றியமைக்கப்படாத சரக்கு’’

இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக, பின்வரும் சகல நிபந்தனைகளையும் நிறைவேற்றுகின்ற அனுப்பு சரக்குகள் ‘‘மாற்றியமைக்கப்படாத சரக்கு’’ என பொருள்படல் வேண்டும்.

(அ) அனுப்பு பொருளானது, இலங்கையின் அதிகார எல்லைகளுக்கப்பாலுள்ள இடத்திலிருந்து அனுப்பப்பட்டு, இலங்கையில் அவை இறக்கி ஏற்றப்பட்ட பின்னர், இலங்கையின் துறைமுகங்கள் அல்லது விமான நிலையங்கள் ஊடாக பிறிதொரு நாட்டுக்கு அனுப்புவதற்காக கொள்கலனில் அடைக்கப்பட்ட சரக்குகளாகவிருத்தல் வேண்டும் ;



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) இலங்கையில் வந்திறங்கும் கொள்கலனானது, சுமப்பவரினால் இடப்படும் பாதுகாப்பு முத்திரையொன்றினைக் கொண்டிருப்பதோடு இலங்கையிலிருந்து இறுதி சேருமிடத்திற்கு அனுப்புவதற்காக இலங்கையின் ஒரு துறைமுகத்தில் கப்பலில் அல்லது விமானத்தில் அக்கொள்கலன் ஏற்றப்படும் வரை மேற்படி பாதுகாப்பு முத்திரை எவ்வித சேதமுமின்றி இருத்தல் வேண்டும் ;

(இ) கொள்கலனானது இலங்கையை வந்திறங்கியது முதல் நேரத்திலிருந்து அதன் இறுதி சேருமிடத்துக்கு ஏற்றும் நேரம் வரை, இலங்கைச் சுங்கத்தின் கண்காணிப்பின் கீழும் மற்றும் கட்டுப்பாட்டின் கீழும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) குறித்த கொள்கலனானது, இலங்கையில் இருக்கும் காலம் முழுவதும், அதில் உள்ள உள்ளடக்கங்கள் எந்த வகையிலும் மாற்றப்படலாகாது என்பதோடு கொள்கலனானது அதில் உள்ள உள்ளடக்கங்கள் நல்ல நிலையில் பேணுவதற்கான தேவைப்பாடு தவிர்ந்த எந்த நடவடிக்கைகளுக்கும் உட்படலாகாது.

3. கொள்கலன்கள் வந்தடைந்ததும், மாற்றியமைக்கப்படாதவை தொடர்பிலான சான்றிதழ் ஒன்றினை பெற விரும்புகின்ற சுமப்பவர்களால் நியமிக்கப்பட்ட உள்நாட்டு முகவர் இது தொடர்பில் சுங்கக் கண்காணிப்புச் சேவைகளை வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுகின்ற சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினை தொடர்பு கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் குறித்த கொள்கலன் இறுதி சேருமிடத்திற்கு அனுப்புவதற்காக இறக்கி ஏற்றப்பட்ட பின்னர் இலங்கை ஊடாக குறித்த சரக்கு இறக்கி ஏற்றப்படுதல் தொடர்பிலான மாற்றியமைக்கப்படாதவை தொடர்பிலான சான்றிதழ்களுக்கான வேண்டுகோள் ஒன்றினை மேற்கொள்வதோடு இவ்வொழுங்கு விதிகளின் தேவைப்பாடுகளை அல்லது இவ்வொழுங்கு விதியின் (2) ஆம் பந்தியிலுள்ள தேவைப்பாடுகளை நிறைவு செய்தல் வேண்டும்.

4. மாற்றியமைக்கப்படாதவை தொடர்பிலான சான்றிதழுக்காக விண்ணப்பிக்கின்ற சுமப்பவர்களால் நியமிக்கப்பட்ட உள்நாட்டு முகவர் அச்சான்றிதழுக்குரிய கொள்கலன் இவ்வொழுங்கு விதியின் (2)ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளும் பூரணப்படுத்தியுள்ளமையை அதே விண்ணப்பத்தில் உறுதிப்படுத்தலும் வேண்டும்.

5. இந்த ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என சுங்கப் பணிப்பாளர் நாயகம் திருப்திப்படின் உடனடியாக, இவ்வொழுங்கு விதி (6) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தினை அறவீடு செய்வதன் பேரில் இத்துடனுள்ள பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளவாறான மாதிரிப்படிவத்தில் மாற்றியமைக்கப்படாதவை தொடர்பிலான சான்றிதழ் ஒன்றினை விநியோகித்தல் வேண்டும்.

6. அவ்வாறு வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சான்றிதழுக்குமாக ஒரு கட்டணத்தினை அறவிடலாம். இக்கட்டணமானது தொடக்கத்தில் ஒரு சான்றிதழுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 10/- க்கு சமமானதொரு தொகையாக இருக்கும். மேற்படி கட்டணமானது நிதி அமைச்சரின் ஆலோசனையின் பேரில் காலத்திற்குக்காலம் மீளமைக்கப்படலாம்.

பின்னிணைப்பு

<table>
<tr>
<td rowspan="2">1. கப்பலேற்று முகவரது/ பொருள் அனுப்புபவரது பெயரும் விலாசமும்</td>
<td>இலங்கைச் சுங்கம்<br>விலாசம் : இல. 40 பிரதான வீதி,<br>கொழும்பு 11- இலங்கை<br>ஈ மெயில் : dgc@customs. gov.lk<br>பெக்ஸ் : + 94 11 2446364<br>தொலைபேசி இல. : + 94 11 2470945 - 8<br><br>மாற்றியமைக்கப்படாதவை<br>தொடர்பிலான சான்றிதழ்<br><br>…………………………… ஆம் இலக்கத்திற்கு இணங்க விநியோகிக்கப்பட்டன.</td>
</tr>
<tr>
<td>அலுவலக பாவனைக்கு மாத்திரம்<br><br>(கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இலங்கைச் சுங்கத்தினால் பொறியிடப்பட்டிருப்பின் பொறியிடல் இலக்கம் இங்கே குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)</td>
</tr>
</table>

2. அனுப்பு பொருட்களது விபரங்கள் :

(அ) பொருட்களது விபரம்

| | |
|---|---|
| (ஆ) பொருட்கள் உற்பத்தி செய்த நாடு | (இ) கப்பலேற்று பட்டியல் இல. : |
| (ஈ) இலங்கையில் விடுவிக்கப்பட்ட திகதி | (உ) இலங்கையிலிருந்து புறப்பட்ட திகதி : |
| (ஊ) இறுதி சேருமிட நாடு | (எ) எதன் ஊடாக (கப்பலின் பெயர் மற்றும் இலக்கம்) |

3. கப்பலேற்று முகவர்/பொருள் அனுப்புபவர் மூலமான பிரகடனம்

நான்/நாங்கள் பிரகடனப்படுத்துவது யாதெனில் ;

(அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் எவ்வித மாற்றங்கள் அல்லது மாறுபாடுகள் செய்யப்படாது இலங்கையில் இருந்து இறுதி சேருமிட நாட்டுக்கு மாற்றி ஏற்றப்பட்டன ; மற்றும்

(ஆ) மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதுமாகும்.

அதிகாரமளிக்கப்பட்டவரது ஒப்பம் :
பெயர் :
பதவி :
திகதி :

(கம்பனி முத்திரை)

4. இலங்கைச் சுங்கத்தினாலான சான்றிதழ்

எங்களது அறிவுக்கெட்டியவரை, ஏற்றுமதியாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ள பிரகடனம் உண்மையானதும் சரியானதுமாகும் என்பதனை நாங்கள் சான்றுப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்டவரது ஒப்பம் :
பெயர் :
பதவி :
திகதி :

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.